டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 4.06.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 287 - Madurai | Online Edition

# ஜல் ஜீவன் இயக்கம் 2.0

# தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுடன் சீர்திருத்தங்கள் சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

புது தில்லி, ஜூன் 3

இந்தியாவின் கிராமப்புறங்களுக்குத் தடையற்ற, பாதுகாப்பான மற்றும் தரமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கில், ஜல் ஜீவன் இயக்கம் 2.0-இன் கீழ் தமிழ்நாடு, புதுச்சேரி, அருணாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களுடன் சீர்திருத்தங்கள் சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நேற்று கையெழுத்திடப்பட்டன.

மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீல், இணை அமைச்சர் வி.சோமண்ணா ஆகியோர் முன்னிலையில், இணையவழி வாயிலாக நடைபெற்ற தனித்தனி கூட்டங்களில் அந்தந்த மாநில முதல்வர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த ஒப்பந்தம், கிராம ஊராட்சிகளின் தலைமையில், பொதுமக்களின் பங்களிப்புடன் கிராமப்புறக் குடிநீர் விநியோகக் கட்டமைப்பை நீண்ட காலத்திற்குப் பராமரிப்பதே முக்கிய நோக்கமாகும். இது, 2047-க்குள் 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தேசிய இலக்கை எட்ட வழிவகுக்கும்.

மத்திய அமைச்சர் சி.ஆர்.பாட்டீல் முன்னிலையில், தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் மற்றும் மாநில உயர் அதிகாரிகள் இணையவழி வாயிலாகக் கலந்து கொண்டனர். தேசிய ஜல் ஜீவன் இயக்கத்தின் இணைச் செயலாளர் டி.செந்தில் பாண்டியன் மற்றும் தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் ஆற்றிய உரையில், ஜல் ஜீவன் இயக்கத்தை அமல்படுத்துவதற்கான காலக்கெடுவை 2028 டிசம்பர் வரை நீட்டித்ததற்காக மத்திய அரசுக்கும், ஜல் சக்தி அமைச்சகத்திற்கும் தனது நன்றியையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொண்டார்.

தமிழகத்தில் வற்றாத ஜீவநதிகள் போன்ற பெரிய நீர் ஆதாரங்கள் இல்லாததால், நம்பகமான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யப் பெருமளவிலான உள்கட்டமைப்பு மற்றும் நீண்ட காலத் திட்டமிடல் அவசியமாகிறது என்று குறிப்பிட்டார். தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி போன்ற கடுமையான நீர் பற்றாக்குறை உள்ள மாவட்டங்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர் திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மத்திய அரசின் நிதி உதவி, கிராமப்புற குடிநீர் உள் கட்டமைப்பை வலுப்படுத்தவும், ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பத் திற்கும் நிலையான முறையில் பாதுகாப்பான குடிநீர் கிடைப் பதை உறுதி செய்யவும் உதவும் என்று கூறி, மத்திய-மாநில அரசுகளின் கூட்டு ஒத்துழைப்பு இந்த சேவையை மேலும் வலுப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தொடர்ந்து மத்திய அமைச்சர் சி.ஆர்.பாட்டீல் வழங்கிய ஆலோசனையில், ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் தமிழ்நாடு இதுவரை செய்துள்ள சிறப்பான முன்னேற்றங்களைப் பாராட்டிய அமைச்சர், விடுபட்ட பணிகளையும் மாநில அரசு விரைவில் முடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். நிதி ஆணையக் குழுவின் மானியங்கள் மற்றும் கிராமப்புற வளர்ச்சி நிதிகளைத் திறம்படப் பயன்படுத்தி, கிராம அளவில் மழைநீர் சேகரிப்பு, நீர் ஆதார நிலைத்தன்மை, நீர் பாதுகாப்பு ஆகிய வற்றில் கூடுதல் கவனம் செலுத்துமாறு தமிழக அரசை அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும், மத்திய ஜல் சக்தித் துறைச் செயலாளர் அசோக் கே.கே.மீனா பேசுகையில், இந்த ஒப்பந்தம் வெறும் குழாய் உள்கட்டமைப்பை அமைப்பது மட்டுமல்லாமல், கிராம அளவில் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராமக் குடிநீர்-சுகாதாரக் குழுக்களை முழு அதிகாரமுடைய தற்சார்பு அமைப்புகளாக மாற்றுவதற்கான மத்திய-மாநில அரசுகளின் கூட்டு உறுதிப்பாடு என்று குறிப்பிட்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விளைநிலம் காப்போம் இயக்க முகாம் நடைபெற்றது




திருச்சி, ஜூன் 3

திருச்சி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரம், வாளவந்தன் கோட்டை கிராமத்தில் விளை நிலம் காப்போம் இயக்கம் முகாம் (KHET BACHAO ABHIYAN) வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி முன்னிலையில் நடைபெற்றது.

இம்முகாமில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் அதன் பயன்கள் குறித்தும், ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10% குறைப்பதன் அவசியம், மண் ஆரோக்கியம், ஊட்டச்சத்து மேலாண்மை, அங்கக மற்றும் இயற்கை உர பயன்பாடுகள், ஊட்டச் சத்துக்கள், பசுந்தாள் உர பயன்பாடுகள், பசுந்தழை பயிர்கள் பயன்பாடு, உர பயன்பாடும் மூலம் சாகுபடி செலவை குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை அதிகரித்தல் ஆகியவை குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் இம் முகாமில் வேங்கூர் கிராமத்தை சேர்ந்த இயற்கை விவசாயியான முத்துக்குமார் கலந்து கொண்டு பழமையான பாரம்பரியமான நெல் ரகங்களை இயற்கை முறையில் சாகுபடி மேற்கொள்வதற்கு உண் டான எளிமையான முறைகளையும் அதிக பொருள் செலவின் றியும் சாகுபடி செய்வதற்கு உண்டான தொழில்நுட்பங்களையும் அனைத்து பாரம்பரிய நெல் ரகங்களுக்கு உண்டான மருத்துவ குணங்களையும் சிறப்புகளையும் விவசாயிகளிடம் விளக்கமாக கூறினார். இதன் மூலம் ஜூன் 1 முதல் 15 வரை விளை நிலம் காப்போம் இயக்கம் முகாமானது அனைத்து கிராம பஞ்சாயத்து களிலும் நடத்தி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இம்முகாமில் வாழவந்தான் கோட்டை கிராம விவ சாயிகள் வேளாண்மை அலுவலர்கள் உதவி அலுவலர்கள் மற்றும் அட்மா திட்டப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**சுவையான சாட் மசாலாப் பொடி**

**தேவையான பொருட்கள்**



சீரகம் மற்றும் தனியா கால் கப்,

மாங்காய் தூள் கால் கப்,

மிளகு ஒரு தேக்கரண்டி,

காய்ந்த மிளகாய் அரை கப்,

உப்பு ஒரு தேக்கரண்டி,

ஏலக்காய் மற்றும் இலவங்கம் தலா 5 எண்ணிக்கை.

**செய்முறை**

மாங்காய் தூள் தேவையான அளவு உப்பு இவை இரண்டும் கலந்து வைக்க வேண்டும்.

மற்ற கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை எல்லாம் நைசாக அரைத்து எடுத்து சாட் மசாலா பொடி தயார் செய்து தேவையான நேரங்களில் நேரடியாக சாதத்தில் போட்டு சாப்பிடலாம்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

# தொலைதூரக் கல்வி மாணவர் சேர்க்கை அறிவிப்பு (2026 –27)

கோயம்புத்தூர், ஜுன் 3

வேளாண் தொழில்புரிவோர் திறனை மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திறந்தவெளி மற்றும் தொலைத்தூரக் கல்வி இயக்ககம் மூலம் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் வேளாண் இடுபொருள் பட்டயப்படிப்பு, பட்டயப்படிப்பு, சான்றிதழ் பாடங்கள் மற்றும் இணையவழி சான்றிதழ் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன். இந்த கல்வி ஆண்டிற்கான (2026 – 2027) புதிய மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வேளாண் இடுபொருள் பட்டயப்படிப்பு முடித்தவர்கள் உரம் மற்றும் பூச்சி மருந்துக்கடை துவங்குவதற்கு தேவையான உரிமம் பெறலாம். இதரப் பட்டயப் படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு படித்தவர்கள் தோட்டக்கலை நாற்றங்கால், பண்ணை இயந்திரக் கருவிகள், காளான் வளர்ப்பு, உயிர் உரங்கள் உற்பத்தி, உயிரியல் முறை பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண் பொருட்கள் மதிப்பூட்டல் மற்றும் தரமான விதை உற்பத்தி தொடர்பான சுய தொழில் தொடங்கி தங்கள் வாழ்க்கைதரம் உயர இந்த தொலைத்தூரக் கல்வி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

வேளாண் இடுப்பொருள் பட்டயப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பிற்கான பயிற்சி வகுப்புகள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறந்த வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்களால் நடத்தப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு : இயக்குநர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003.

தொலைபேசி எண்கள் : 94421 11048, 94890 51046, 0422 – 6611229, மின்னஞ்சல் : odl@tnau.ac.in, இணைய தளம் : www. tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# விளைநிலம் காப்போம் இயக்க விழிப்புணர்வு கூட்டம் நடந்தது






சேலம், ஜூன் 3

மத்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அறிவுறுத்தலின்படி, நாடு முழுவதும் ஜூன் 1 முதல் ஜூன் 30 வரை "விளைநிலம் காப்போம் இயக்கம்" (Khet Bachao Abhiyan) தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் முன்னிலையில் விவசாயிகளுக்கான சிறப்பு விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மண்ணின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது மற்றும் நிலையான வேளாண்மையை மேம்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விரிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும் 'மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, சமச்சீரான உரப் பயன்பாட்டின் மூலம் சாகுபடிச் செலவைக் குறைப்பதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை நமது விளைநிலங்கள் பெற வேண்டும். தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தை எடப்பாடி வட்டாரத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திப் பயனடைய வேண்டும்' என்று விவசாயிகளை வேளாண்மை உதவி இயக்குனர் பூங்கொடி கேட்டுக்கொண்டார்.

மேலும் இக்கூட்டத்தில் துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கான ஏற்பாடு களை அட்மா பணியாளர்கள் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான விதை மற்றும் இடுபொருள்கள் போதுமான அளவில் உள்ளது

# வேளாண்மை துறை தகவல்



அரியலூர், ஜூன் 3

அரியலூர் மாவட்டம், வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் அறிவுரையின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், அரியலூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் கிடங்கை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது உதவி விதை அலுவலர் மற்றும் கிடங்கு மேலாளர் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், விவசாயிக்கு இடுபொருள்கள் வழங்கும்போது, மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விவசாயிகளுக்கு போதுமான அளவு விதை மற்றும் இடுபொருள்கள் போதுமான அளவில் உள்ளது. குறிப்பாக உளுந்து வம்பன் 8, வம்பன் 10, நிலக்கடலை வி ஆர் ஐ 10 நெல் டி பி எஸ் 5 மற்றும் கோ 55, நுண்ணூட்ட சத்துக்களான கடலை, நெல், சிறுதானியம், பருத்தி, மற்றும் கரும்பு பயிர்களுக்கு தனித்தனியாக நுண்ணூட்ட சத்து போதுமான அளவில் இருப்பில் உள்ளது மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ், பாக்ரியா, ரைசோபியம் மற்றும் துத்தநாக பாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் போதுமான அளவில் இருப்பில் உள்ளது. மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி போன்றவை போதுமான அளவில் இருப்பில் உள்ளது. விவசாயிகள் அனைத்து பயிர்களுக்கும் உயிர் உரங்களை பயன்படுத்தும் போது தழைச் சத்து, மணி சத்து, சாம்பல் சத்து,

பொட்டாஸ் சத்து மற்றும் துத்தநாக சத்து மண்ணில் அதிகரித்து பயிருக்கு அதிக அளவில் கிடைப்பதால், பயிருக்கு இடப்படும் உரங்களை அதிக அளவு குறைத்து, மண்வளத்தை காத்து அதிக மகசூல் பெறலாம் என்றார். அனைத்து வகை பயிர் களுக்கான நுண்ணூட்டச் சத்துக்களை பயன்படுத்தும் போது, அந்த பயிருக்கு தேவையான நுண்ணூட்டங்கள் கிடைப்பதால், அதிக அளவு மகசூல் பெறலாம்.

எனவே விவசாயிகள் அனைத்து பயிர்களுக்கும் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள உயிர் உரங்கள், நுண்ணூட்டச் சத்து உரங்கள் பயன்படுத்தி உரம் செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம், மற்றும் உயிரில் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்தும் போது, சாகுபடி செய்ய இருக்கும் பயிரை தாக்கும் நோய்களிலிருந்து பாதுகாப்பது மட்டுமல்லாமல், மண்ணில் நன்மை செய்யக்கூடிய வளர்ச்சி யூக்கிகளை உருவாக்கி அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# குறுவை பருவத்தில் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

‘வித்தைப் பொருத்தே விளைவின் திறமை‘ என்ற சொல் விவசாயத்தில், விதைக்கு உள்ள முக்கியத்துவத்தை எடுத்துரைக் கிறது. அத்தகைய விதை, நல்ல தரமானதாகவும், அதிக முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் சரியான ஈரப்பதம் கொண்டதாகவும் இருந்தால் மட்டுமே பயிர்களுக்கு இடப்படும் இடுபொருட்களான உரம், பூச்சி மருந்து போன்றவை இடப் பட்டதற்கான முழுமையான நோக்கம் நிறைவேறும்.

விவசாயத்தில் அதிக மகசூல் பெற சரியான பயிர் எண்ணிக்கை பராமரித்தல் மிக அவசியமாகும். ஒரு பயிரின் பயிர் எண்ணிக்கை என்பது அதன் முளைப்புத்திறனை பொறுத்தே அமைகிறது. தரமான விதையை பயன்படுத்தாவிட்டால் பயிர் எண்ணிக்கை குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விடும்.

நடப்பு குறுவை பருவத்தில் (வைகாசி–ஆனி) விதைப்பு மேற்கொள்ள உள்ள நெல் மற்றும் பயறு வகை பயிரிடும்



விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்து விதைப்புக்கு தயாராக வைத்துள்ள விதைகளின் தரத்தை அறிந்து கொள்ள விதை பரிசோதனை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

விதையின் தரம் அறிந்து விதைப்பு செய்தால் நல்ல மகசூல் பெறலாம். குறைந்தபட்சம் நெல்லுக்கு 80 சதவீதம், மக்காச் சோளத்திற்கு 90, பயறு வகை பயிர்களுக்கு 75, எண்ணைய்-வித்து பயிர்களுக்கு 70, காய்கறி பயிர்களுக்கு 60 முதல் 70 சதவீதம் வரை முளைப்புத்திறன் இருக்க வேண்டும்.

நம் மாவட்டத்தில் குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ASD 16, ADT 36, ADT 37, ADT (R) 45, TPS 5, ASD 21 மற்றும் CO 51 இவற்றில் இருப்பு வைத்துள்ள விதை களில், முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதத்தினை பரிசோதனை செய்து தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்பதன் மூலம் அதிக லாபம் பெறலாம்.

உழவர் பெருமக்கள் தங்கள் விளை நிலங்களில் இருந்து பெறப்பட்ட தானிய வகை விதைகள், பயறு வகை விதைகள் மற்றும் எண்ணெய்வித்து போன்ற விதைகளை, விதைக்காக சேமிக்கும் முன்பும், அடுத்த பருவத்திற்கு விதைக்காக பயன்படுத்தும் முன்பும் அதன் தரத்தினை அறிந்து கொள்ள விதை பரிசோதனை செய்வது இன்றியமையாததாகும்.

எனவே, விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளில் மாதிரி எடுத்து, தமிழக அரசின் விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று இணையதள முகவரியான SPECS-ல் பதிவு செய்து பின்னர் அதன் நகல் எடுத்து பயிர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விதை மாதிரி

ஒன்றுக்கு ரூ.80/- கட்டணத்துடன் நேரடியாகவோ (அல்லது) தபால் வாயிலாகவோ கீழ்க்கண்ட முகவரியை தொடர்பு கொண்டு விதை பரிசோதனையின் மூலம் தங்களிடமுள்ள விதையின் தரத்தினை அறிந்து கொள்ளுமாறு வேளாண்மை அலுவலர்கள் த.ஆசைத்தம்பி மற்றும் இ.விஜயா கேட்டுக் கொண்டனர்.

அணுக/அனுப்ப வேண்டிய முகவரி : வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு வளாகம், பெருந்துறை ரோடு, பிச்சாண்டாம்பாளையம் (அஞ்சல்), ஈரோடு மாவட்டம் - 638 052.



# வன விலங்குகளால் ஏற்படும் சேதங்களுக்கு வனத்துறை வழங்கும் இழப்பீடு எவ்வளவு தெரியுமா?



கடந்த சில ஆண்டுகளாக வனவிலங்குகளுக்கும் விவசாயிகளுக்கான மோதல் (HUMAN WILDLIFE CONFLICT) அதிகரித்த வண்ணமாக உள்ளது. இதனால் விவசாயிகள் பாடுபட்ட உழைத்த விளைச்சலை வீடு வந்து சேர்க்க முடியாமல் தவித்து போய் உள்ளனர். குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையடிவார விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். இது மட்டுமா சமீப காலமாக சமவெளி பகுதியிலும் காட்டு பன்றி தாக்குதல் அதிகமாக உள்ளது.

**என்னென்ன வனவிலங்குகள் அதிகமாக சேதாரத்தை உண்டாக்குபவை தெரியுமா?**

மான், மிளார் காட்டு பன்றி, யானை, முயல், மயில், கரடி, குரங்கு, காட்டு மாடுகளாலும் சேதம் உண்டாக்குகின்றன.

**என்னென்ன பயிர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன?**

நெல், மக்காசோளம், பருத்தி, நிலக்கடலை, பயறுவகை பயிர்கள் சமவெளியிலும் மா, தென்னை, வாழை போன்ற பயிர்கள் மலையடிவாரத்திலும் தாக்குதலுக்கு ஆளாகின்றன.

இப்படி பாதிக்கப்பட்ட பயிரின் பரப்பை அளந்து கிராம அடங்கலில் பதிவு செய்ய வேண்டும். பின் முறையாக வனத்துறைக்கு மனு செய்ய வேண்டும். 48 மணி நேரம் முதல் 72 மணி நேரத்திற்குள் சம்மந்தப்பட்ட வனத்துறை அலுவலர் மற்றும் வேளாண் துறைக்கு விண்ணப்பிக்க வேண்டும். முறையான விண்ணப்பம் கிடைக்க பெற்ற 30 நாட்களுக்குள் (COMPANSATION) நிவாரணம் வழங்கப்படும்.

**வனத்துறை வழங்கும் இழப்பீடு என்ன?**

1) வனவிலங்கு தாக்குதலில் மனிதர்கள் உயிரிழந்தாலோ / நிரந்தர ஊனமுற்றவர்களாக மாறி இருந்தால் அவர்களுக்கு இழப்பீடாக ரூ.4 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டது. 2024க்கு பிறகு அது ரூ.10 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2) வனவிலங்கு தாக்குதலில் பெரிய அளவு காயம் பட்டால் சிகிச்சைக்காக ரூ.59,100 மட்டுமே இழப்பீடாக உள்ளது.

3) வனவிலங்குகளால் பயிர் சேதம் ஏற்பட்டால் ஏக்கருக்கு 25 ஆயிரம் மட்டுமே.

4) யானைகளால் சேதமடைந்த தென்னை மரத்திற்கு இழப்பீடாக 500 மட்டுமே.

5) யானைகளால் முழுவதுமாக இடிக்கப்பட்ட கான்கீரிட் வீடுகளுக்கு ரூ.95,100 மட்டுமே.

6) குடிசை வீடுகளுக்கு ரூ.10,000 மட்டுமே இழப்பீடாக வழங்கப்படுகிறது.

**கால்நடைகள் இழப்பீடு**

1) வனவிலங்குகளால் உயிரிழைப்பை சந்திக்கும் கறவை மாடுகளுக்கு ரூ.30,000, காளை மாடுகளுக்கு ரூ.25,000, ஆடுகளுக்கு ரூ.3000, கோழிகளுக்கு ரூ.100/– தலா இழப்பீடாக வழங்கப்படுகிறது.

2) வீட்டுல வளர்க்கப்படும் பன்றிகளுக்கு ரூ.3000 மட்டுமே.

3) வனவிலங்குகளால் வீடுகளில் ஏற்படும் பொருள் சேதாரங்களுக்கு இழப்பீடாக ரூ.2000யும், நீர்ப்பாசன கருவிகள் சேதாரத்திற்கு தலா ரூ.2000யும் இழப்பீடாக வழங்கப்படுகிறது.

வனவிலங்குகளால் அதிக பாதிப்பு சேதாரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வருகிறது. இந்த காலகட்டத்தில் இந்த சொற்ப தொகையான இழப்பீடை பெறுவதில் வேதனைபடுகின்றனர். காலத்திற்கு ஏற்ற சாகுபடி, இடுபொருள் செலவு கணிசமாக உயர்ந்துள்ளன. இதனால் இழப்பீடாக வழங்கும் தொகையும் உயர்த்த வேண்டும் என்பது விவசாயிகளின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. புதியதாக பொறுப்பேற்ற அரசு கவனத்தில் கொள்ள விவசாயிகள் வேண்டு கோளாக விடுக்கின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மாவட்ட அளவிலான விவசாயிகளுடன் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்



திருச்சி, ஜூன் 3

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மும்முடி சோழ மங்கலத்தில் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகளுடன் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், சத்யபிரியா, கலந்து கொண்டு பேசுகையில் கோடை உழவு செய்தல், பசுந்தாள் உர பயிர்கள் விதைப்பு செய்தல், சான்று பெற்ற விதைகள் பயன்படுத்துதல், இலை வண்ண அட்டை பயன்படுத்தி தழைச் சத்து, மேலாண்மை செய்தல், மண்புழு உரம் பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். வேளாண்மை அலுவலர் கௌசல்யா பேசுகையில் திரவ வடிவிலான உயிர் உரங்கள் பயன்படுத்துதல், நுண்ணூட்ட உரம் பயன்படுத்துதல், களை மேலாண்மை, வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானியத்திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். வேளாண்மை கல்வி நிலையம் குமுளூர் டாக்டர் வினோத் பேசுகையில் குறுவை சாகுபடி நெல்லில் புதிய ரகங்கள் பயன்படுத்துதல், பல்வேறு நிலை விதை வகைகள் வல்லுனர் விதை, சான்று, ஆதார விதை, உண்மை நிலை விதைகள் வேறு பாடு மற்றும் குணாதிசயங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். கோனோ வீடர் கொண்டு களை மேலாண்மை செய்தல், நெற் பயிரில் நுண்ணூட்டசத்து குறைபாடு நிவர்த்தி செய்தல், ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், மண்புழு உரம் உற்பத்தி, ஒட்டுண்ணி அட்டை பயன்படுத்துதல், மேலும் நவீன சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் விவசாயிகள் பயிற்சி கண்டு உணர்வு சுற்றுலாவில் கலந்து கொள்ளும் விவசாயிகள் முன் உரிமை பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு கலந்து கொள்ள கேட்டுக் கொண்டார். பாரதப் பிரதமரின் விவசாயிகள் கவுரவ நிதி திட்டத்தில் புதிய பயனாளிகள் இணைவதற்கு உண்டான வழிகாட்டு நெறிமுறைகள், நில உடமை பதிவு செய்யும் முறைகள் பற்றி விரி வாக விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். இதற்குண்டான ஏற் பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், தமிழ்மணி ஆகியோர் செய்து இருந்தனர். மேலும் இந்த கலந்துரையாடலில் லால்குடி வட்டாரத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# எண்ணெய்வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளி துவக்கம்

அரியலூர், ஜூன் 3

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையில் செயல் படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின் கீழ் எண்ணெய்வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி தேவாமங்கலம் கிராமத்தில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமையில் நடைபெற்றது.




அவர் பேசுகையில் விவசாயிகள் சாகுபடியின் போது மண் ஆய்வு செய்து பயிருக்குத் தேவையான அளவு உரங்களை மட்டும் இட்டு சாகுபடி செலவைக் குறைத்து மண் வளத்தைப் பாதுகாத்து குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம் எனவும் விவசாயிகள் அனைவரும் வேளாண் துறை மற்றும் சகோதரத் துறைகளின் திட்டங்களைப் பெற்று பயனடைய விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் எனவும் விளக்கினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன் எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், ஆமணக்கு பயிர்கள் சாகுபடியில் டி.விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்தல், விதைப்பு நிலம் தயார் செய்தல், அடியுரமிடுதல் ஆகிய தொழில்நுட்பங்களை விளக்கினார். பிற சாகுபடித் தொழில்நுட்பங்களான நீர் நிர்வாகம், களை நிர்வாகம், உர நிர்வாகம், ஊடுபயிர்கள் சாகுபடி, பயிர் வளர்ச்சி ஊக்கி தெளிக்கும் முறை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாட்டு முறைகள் ஆகிய தொழில்நுட்பங்கள் பின்வரும் பண்ணைப் பள்ளி வகுப்புகளில் நடத்தப்படும்.

இப்பண்ணைப் பள்ளியுடன் விளைநிலம் காப்போம் இயக்கத்தின் விழிப்புணர்வு முகாமும் நடத்தப்பட்டது.

இம்முகாமில் இயற்கை வேளாண்மை, ஆரோக்கியமான உணவு உட்கொள்ளுதல், மண்வளத்தைப் பாதுகாத்தல், அங்கக மற்றும் இயற்கை உர பயன்பாடுகள், பசுந்தாள் உர பயன்பாடு, நுண்சத்து பயன்பாடு, நிலவி வரும் காலநிலை மாற்றங்களுக்கேற்ப அவற்றை எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் மண் ஆய்வு செய்து உரமிடுதலின் அவசியம் குறித்தும் விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ்குமார், பிரதம மந்திரி கவுரவ நிதி உதவித் திட்டம் குறித்து விளக்கினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆரோக்கியராஜ் உழவன் செயலி குறித்து விளக்கி நன்றி கூறினார். தேவாமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், பண்ணை மகளிர் பண்ணைப் பள்ளி வகுப்பில் கலந்து கொண்டனர்.

# விதைப்பரிசோதனையின் முக்கியத்துவம்

சேலம், ஜூன் 3

விதைப் பரிசோதனை செய்யப்பட்ட விதைகளையே விதைப்புக்கு பயன்படுத்திட வேண்டும் என சேலம் விதைப் பரிசோதனை நிலைய, வேளாண்மை அலுவலர்கள் பே.கவிதா, மு.நந்தினி, விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விதைப் பரிசோதனை செய்து விதைப்பது நல்ல சாகுபடிக்கு அடிப்படையானதாகும். நல்ல தரமான விதையே நல்ல மகசூலைத் தரும். தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட சேலம் விதைப் பரிசோதனை நிலையத்தில் சான்று விதை, ஆய்வாளர் விதை மற்றும் பணி விதை மாதிரிகள் பகுப்பாய்வு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒரு விதை தரமானதா அல்லது தரமற்றதா என்பதனை அதன் முளைப்புத் திறன், அளவான ஈரப்பதம், சரியான புறத்தூய்மை, பூச்சி/நோய் தாக்குதல் இல்லாமல் வீரிய நாற்றுக்களைக் கொடுக்கக் கூடியதுமான திறன் இதனைக் கொண்டே அறிய முடியும்.

விவசாயிகள் முந்தைய விளைச்சலில் இருந்து கிடைக்கும் விதைகளையே அடுத்த சாகுபடிக்கு பயன்படுத்தி வருகின்றனர். அத்தைகைய விதைகளில் வீரியம் குறைவான, நோய் தாக்கிய, உடைந்த விதைகள் ஆகியவையும் இருக்கும். வீரியம் குறைவான விதைகளும் முளைக்கும்.

ஆனால் தரமான நாற்றுக்களை கொடுக்காது. நோய் தாக்கிய விதைகளும் முளைத்த மூன்று அல்லது நான்கு நாட்களில் கருகி விடும். இதனை விதைப் பரிசோதனையில் கண்டுபிடித்து, முளைப்புத் திறனில், இயல்பானது, இயல்பற்றது, கடின விதைகள், பூச்சி நோய் தாக்குதல் சதவீதம் என கண்டறிந்து வகைப்படுத்தி தர நிர்ணயம் செய்யப்படுகிறது. அவ்வாறான தரமான விதையைப் பயன்படுத்தினால் தான் நாம் எதிர்பார்க்கும் மகசூலைப் பெற முடியும்.

அதற்கு விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைக் குவியலிலிருந்து விதை மாதிரி எடுத்து விதையின் பெயர் மற்றும் இரகம், குவியல் எண், தேவைப்படும் பரிசோதனை முடிவுகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். மேலும் ஈரப்பத பரிசோதனைக்கு தனியாக பாலிதீன் பைகளில் 100 கிராம் அளவு அனுப்ப வேண்டும்.

மேலும் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டிய குறிப்பிட்ட அளவுகளில் மாதிரிகள் அனுப்பப்பட வேண்டும். விதை மாதிரிகளை முகப்புக் கடிதத்துடன் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/- என்ற விகிதத்தில் வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், அறை எண் 403, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் - 636 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# அட்மா திட்டத்தின் கீழ் நாற்றங்கால் பராமரிப்பு மற்றும் மண்வளம் குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், ஜுன் 3

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் விவசாயி களுக்கு தா.பழூர் கிராமத்தில் நாற்றங்கால் பராமரிப்பு மற்றும் நாற்று உற்பத்தி தலைப்பில் பயிற்சி நடைப்பெற்றது.






இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தமிழ்மணி தலைமையேற்று பேசுகையில், உயிர் உரங்களை தொழுஉரத்துடன் கலந்து வைத்து நுண்ணுயிர் களைப் பெருக்கி வயலில் இடுவதன் மூலம் ரசாயன உர பயன்பாட்டினை குறைக்கலாம் எனவும், உழவன் செயலி, தக்கை பூண்டின் பயன்பாடு, வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறினார். மேலும் மண்மாதிரி எடுப்பது குறித்தும், இரசாயன உரங்களை குறைத்து, இயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்தும் போது மண்வளம் பேணி பாதுகாக்கப்பதுகிறது என எடுத்துக் கூறினார் மற்றும் விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத் துறை மற்றும் சகோதர துறைகளின் திட்டங்களைப் பெற விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் என கூறினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் விக்னேஸ்வரன் கலந்து கொண்டு விவசாயிகளிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், நாற்று உற்பத்தி முறைகள் மற்றும் அதன் பராமரிப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் விளை நிலம் காப்போம் இயக்கம் கேத் பச்சோ அபியான் திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் சமச்சீர் உர நிர்வாகம் குறித்தும் விழிப்புணர்வு முகாமில் எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் கோடை உழவு செய்தல், மண்பரிசோதனை செய்து உரமிடுதல், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் போது 25 சதவீதம் இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண்வளத்தை மேம்படுத்தலாம் என்று விரிவாக விளக்கி கூறினார்.

முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமி மற்றும் உசா, உதவி வேளாண்மை அலுவலர் சரத்குமார் மற்றும் தா.பழூர் பகுதி விவசாய பெருமக்கள் கலந்துக்கொண்டனர்.

# வேளாண் கழிவு மேலாண்மை : சமீபத்திய பிரச்சினைகள் மற்றும் பொறியியல் தலையீடுகள்

**அறிமுகம்**

இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண்மைத் துறையில் ஆண்டுதோறும் அதிகளவு வேளாண் கழிவுகள் உருவாகின்றன. நெல், கோதுமை, கரும்பு, பருத்தி மற்றும் காய்கறி பயிர்களின் அறுவடைக்குப் பிறகு கிடைக்கும் தாவர எச்சங்கள், கால்நடை கழிவுகள் மற்றும் வேளாண் பதப்படுத்தல் கழிவுகள் ஆகியவை வேளாண் கழிவுகளாகக் கருதப்படுகின்றன. இக்கழிவுகளை முறையாக மேலாண்மை செய்யாததால் சுற்றுச்சூழல் மாசுபாடு, மண் வளக் குறைபாடு மற்றும் மனித ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

**வேளாண் கழிவுகளின் வகைகள்**



**1. குப்பை சேகரிக்கும் பெண்**

**பயிர் எச்சங்கள்**

- நெல் வைக்கோல்
- கோதுமை தண்டு
- கரும்புத் தோகை
- பருத்தி தண்டுகள்

**2. கால்நடை கழிவுகள்**

- சாணம்
- கோழி எச்சங்கள்

**3. வேளாண் பதப்படுத்தல் கழிவுகள்**

- அரிசி உமி
- கரும்புச் சக்கை
- தேங்காய் நார் கழிவுகள்

**சமீபத்திய பிரச்சினைகள்**

**1. பயிர் எச்சங்களை எரித்தல்**

பல விவசாயிகள் அறுவடைக்குப் பிறகு பயிர் எச்சங்களை வயலில் எரிக்கின்றனர். இதனால் கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் மற்றும் நச்சு வாயுக்கள் வெளியேறி காற்று மாசுபாடு ஏற்படுகிறது.

**2. சுற்றுச்சூழல் மாசுபாடு**

கழிவுகளை திறந்த வெளியில் கொட்டுவதால் நிலம், நீர் மற்றும் காற்று மாசுபடுகின்றன. மேலும் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றம் அதிகரிக்கிறது.

**3. மண் வளக் குறைபாடு**

பயிர் எச்சங்களை எரிப்பதால் மண்ணில் உள்ள கரிமப் பொருட்கள் மற்றும் நுண்ணுயிரிகள் அழிந்து மண் வளம் குறைகிறது.

**4. தொழிலாளர் பற்றாக்குறை**

கழிவுகளை அகற்றவும், மறுசுழற்சி செய்யவும் தேவையான தொழிலாளர்கள் குறைவாக உள்ளனர்.

**5. காலநிலை மாற்றத்தின் தாக்கம்**

காலநிலை மாற்றத்தால் வேளாண் உற்பத்தி முறைகள் மாறி, கழிவு மேலாண்மையில் புதிய சவால்கள் உருவாகின்றன.

**பொறியியல் தலையீடுகள்**

**1. உயிரி உரம் தயாரித்தல்**

வேளாண் கழிவுகளை மட்கச் செய்து உயிரி உரமாக மாற்றுவது ஒரு சிறந்த முறையாகும். இது மண்ணின் கரிமச் சத்து மற்றும் நீர்ப்பிடிப்பு திறனை அதிகரிக்கிறது.




**2. உயிரி வாயு உற்பத்தி**

கால்நடை மற்றும் பயிர் கழிவுகளைப் பயன்படுத்தி உயிரிவாயு தயாரிக்கலாம். இதன் மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கிடைக்கிறது.

**3. பயோசார் தொழில்நுட்பம்**

வேளாண் கழிவுகளை ஆக்சிஜன் குறைவான சூழலில் எரித்து பயோசார் தயாரிக்கப்படுகிறது. இது மண்வளத்தை மேம் படுத்துகிறது மற்றும் கார்பன் சேமிப்பை அதிகரிக்கிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### 4. இயந்திரமயமான கழிவு மேலாண்மை

- ஹாப்பி சீடர் (Happy Seeder) & ஸ்ட்ரா ரீப்பர் (Straw Reaper)
- பேலர் (Baler) போன்ற கருவிகள் மூலம் பயிர் எச்சங்களை சேகரித்து பயனுள்ள முறையில் பயன்படுத்த முடிகிறது.

### 5. உயிரிசக்தி உற்பத்தி

வேளாண் கழிவுகளை பயன்படுத்தி மின்சாரம் மற்றும் உயிரி எரிபொருள் உற்பத்தி செய்யலாம். இது புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கிறது.

### 6. துல்லிய வேளாண்மை

சென்சார்கள், ட்ரோன்கள் மற்றும் IoT தொழில் நுட்பங்களின் மூலம் கழிவு உருவாக்கத்தைக் குறைத்து வளங்களை திறமையாகப் பயன்படுத்த முடிகிறது.

### வேளாண் கழிவு மேலாண்மையின் நன்மைகள்

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- மண் வள மேம்பாடு
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி
- விவசாயிகளின் வருமான உயர்வு
- பசுமை இல்ல வாயு வெளியேற்றம் குறைதல்
- நிலையான வேளாண்மை வளர்ச்சி

### முடிவுரை

வேளாண் கழிவுகள் ஒரு பிரச்சினையாக இல்லாமல் மதிப்புமிக்க வளமாக மாற்றப்படலாம். நவீன பொறியியல் தொழில்நுட்பங்கள், இயந்திரமயமாக்கல் மற்றும் உயிரிசக்தி உற்பத்தி முறைகள் மூலம் வேளாண் கழிவுகளை பயனுள்ள வளங்களாக மாற்ற முடியும்.

'வேளாண் கழிவுகளை வளமாக மாற்றுவோம் – சுற்றுச்சூழலையும் வேளாண்மையையும் பாதுகாப்போம்.

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com.***



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்

## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மக்காசோள பயிரில் பண்ணை பள்ளி பயிற்சி



சேலம், ஜுன் 3

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரம் மூலப்புதூர் கிராமத்தில் மக்காச்சோள பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது.


வேளாண்மை உதவி இயக்குனர் மோகன் சரிதா தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேலன் வரவேற்று பேசினார்.

ஏத்தாப்பூர் மரவள்ளி ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ராஜேஷ், கலந்து கொண்டு மக்காச்சோளப் பயிரில் விதை முதல் விளைச்சல் வரை தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் கே சி ரவி, மக்காசோள பயிரில் களை மேலாண்மை பற்றி சிறப்புரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளராக உப்பிலியபுரம் ஆர் கே வேளாண் சேவை மையம் நிறுவனர் முகமது உமர், கலந்து கொண்டு உர வேளாண்மை மற்றும் பூஞ்சான கொல்லி பயன்படுத்தும் முறையை எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் அருள்மணி, நடப்பு திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பிரபா, சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396